# பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
**(Re-accredited with "A" Grade by NAAC)**
பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி – 620 024.

முனைவர். இரா. திருமுருகன் பி.ஹெச்.டி.
தேர்வு நெறியாளர் (பொ)

தொலைபேசி: 0431- 2407016, 2407060
தொலைஅச்சு: 0431 – 2407444
மின்னஞ்சல் : coe@bdu.ac.in
இணையதளம்: www.bdu.ac.in


கடித எண். தேர்வுப்பிரிவு **/PG exams –April 2017** தேதி: 01.02.2017

பெறுநர்
முதல்வர்
இணைவு பெற்ற தன்னாட்சி அல்லாத அனைத்துக் கல்லூரிகள்

அய்யா/அம்மையீர்

பொருள்: ஏப்ரல் 2017-ல் நடைபெறவிருக்கும் பல்கலைக்கழக முதுநிலை பட்டமேற்படிப்பு மற்றும் பட்டயப்படிப்புகள் – தேர்வுகளுக்கு விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் தேர்வு துவங்கும் நாள் - தெரிவித்தல் – தொடாபாக.

----

நடைபெறவிருக்கும் ஏப்ரல் 2017 பல்கலைக்கழக பட்ட மேற்படிப்பு மற்றும் பட்டயப்படிப்பு தேர்வுகளுக்கான பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பங்கள் தேர்வு கட்டணத்துடன் பெறுவதற்குரிய கடைசி நாள் எழுத்துத் தேர்வுகள் செய்முறைத் தேர்வுகள் துவங்கும் நாள் ஆய்வுக்கட்டுரை வாய்மொழித்தேர்வு துவங்கும் நாள் ஆகியவை கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது. **(except MBA & MCA)**

<u>பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பங்கள் பெறுவதற்குரிய கடைசி நாள்:</u>

| | |
|---|---|
| தண்டத் தொகையின்றி | : 01.03.2017 |
| தண்டத் தொகையுடன் | : 08.03.2017 |
| பட்டமேற்படிப்பு எழுத்துத் தேர்வுகள் துவங்கும் நாள் | : 24.04.2017 (திங்கட்கிழமை) |
| செய்முறைத்தேர்வுகள் நடைபெறும் தேதிகள் | : 03.03.2017 **to** 13.03.2017 |

**(Practical exams for M.A..,M.Sc.,M.Com..,MSW & PGDCA)**

மேற்கண்ட தகவல்களை மாணவ/மாணவியர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கும் தெரிவிக்கும் வண்ணம் கல்லூரி, அறிவிப்புப் பலகையில் வெளியிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

பூர்த்தி செய்யப்பட்ட தேர்வு விண்ணப்பங்கள் பல்கலைக்கழகத்திற்கு வந்து சேர வேண்டிய கடைசி தேதி <u>15.03.2017.</u> மேற்காணும் அறிவிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் வரும் அனைத்து தேர்வு விண்ணப்பங்கள் எக்காரணத்தைக் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. 90 நாட்கள் கல்லூரி, இயங்கியதற்குரிய சான்றிதழைத் தேர்வு துவங்குவதற்கு பத்து நாட்கள் முன்னதாகப் பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைக்கும்படி முதல்வர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். முதுநிலைப் பாடப்பிரிவுகளுக்கான தேர்வு விண்ணப்பங்களைத் தனித்தனியாக(**subject wise**) இணைப்புக் கடிதங்களுடன் அனுப்பி வைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. தேர்வு விண்ணப்பத்துடன் அனுப்பும் பட்டியலினை குறுந்தகட்டுடன் **List with CD** இணைத்து அனுப்பவும்.

மீளப்பயிலுதல் (**Re-do**) மறு சேர்க்கை (**Re-admission**) மற்றும் மாற்றுச் சேர்க்கை (**Transfer admission**) பெற்ற மாணவ/மாணவிகளின் தேர்வு விண்ணப்பத்துடன் மேற்கண்ட சேர்க்கைகளுக்கான பதிவாளரிடமிருந்து பெறப்பட்ட ஆணையின் நகலை மறக்காமல் இணைத்து அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.மேலும் தேர்வு விண்ணப்பத்தில் மாற்றுச் சேர்க்கை, மறுசேர்க்கை மற்றும் மீளப்பயிலும் மாணவ/மாணவியர் என்பதனைத் தெளிவாகக் குறிப்பிடவும். அவ்வாறு குறிப்பிட்டு அனுப்பப்படாத தேர்வு விண்ணப்பங்கள் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

இக்கடிதம் கிடைக்கப் பெற்றமைக்கு ஒப்புதல் அளிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள

01/02

தேர்வு நெறியாளர்(பொ)

# பாரதிதாசன் பல்கலைக்கழகம்,
**(Re-accredited with "A" Grade by NAAC)**
பல்கலைப் பேரூர், திருச்சிராப்பள்ளி – 620 024.

முனைவர். இரா. திருமுருகன் பி.ஹெச்.டி.
தேர்வு நெறியாளர் (பொ)

தொலைபேசி: 0431- 2407016, 2407060
தொலைஅச்சு: 0431 – 2407444
மின்னஞ்சல் : coe@bdu.ac.in
இணையதளம்: www.bdu.ac.in


கடித எண். தே.பி / **P.G.Practical/Project** / ஏப்ரல் 2017 **தேதி: 01.02.2017**

பெறுநர்
முதல்வர்
இணைவு பெற்ற தன்னாட்சி அல்லாத அனைத்துக் கல்லூரிகள்

அய்யா/அம்மையீர்

பொருள்: ஏப்ரல் 2017-ல் நடைபெறவிருக்கும் பல்கலைக்கழக முதுநிலை பட்டமேற்படிப்பு மற்றும் பட்டயப்படிப்புகள் – செய்முறைத் தேர்வு, ஆய்வுக்கட்டுரை, வாய்மொழித் தேர்வு மற்றும் களப்பணி தேர்வுகளுக்கு தேர்வு துவங்கும் நாள் - தெரிவித்தல் – தொடாபாக.

----

நடைபெறவிருக்கும் ஏப்ரல் 2017 பட்ட மேற்படிப்பு மற்றும் பட்டயப்படிப்பு தேர்வுகளுக்கான செய்முறைத் தேர்வுகள் துவங்கும் நாள் ஆய்வுக்கட்டுரை வாய்மொழித்தேர்வு மற்றும் களப்பணி துவங்கும் நாள் ஆகியவை கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது. **(except MBA & MCA)**

செய்முறைத்தேர்வு,ஆய்வுக்கட்டுரை,களப்பணி தேர்வுகளுக்கான **(Practical exams for M.A..,M.Sc.,M.Com..,MSW & PGDCA)** தேர்வுகள் 03.03.2017 முதல் ஆரம்பித்து 13.03.2017-க்குள் நடத்தும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. இதனை தங்கள் கல்லூரியில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கும் சம்பந்தப்பட்ட துறைப்பேராசிரியர்களுக்கும் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது.

செய்முறைத் தேர்விற்கான மாதிரி கால அட்டவணையைத் தயார் செய்து 10.02.2017-க்குள் இரண்டு நகல்கள் எடுத்து இவ்வலுவலகத்திற்கு உடன் அனுப்பி ஒப்புதல் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும் தங்கள் கல்லூரியில் பயிலும் அனைத்துக் மாணவர்களின் அகமதிப்பீட்டு மதிப்பெண்கள், செய்முறைத் தேர்வு மதிப்பெண்கள் ஆய்வுக்கட்டுரை மற்றும் வாய்மொழித் தேர்வு மதிப்பெண்கள் மற்றும் களப்பணித் தேர்விற்கான மதிப்பெண்கள் ஆகியவைகளை **01.04.2017** தேதிக்குள் இணையதளத்தின் வாயிலாகவும் (**www.bdu.ac.in/exam-esubmit**) மற்றும் அஞ்சல் வழியாகவும் தேர்வு நெறியாளருக்கு அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. இக்கடிதத்தின் மீது தனிக்கவனம் செலுத்தி உடன் மதிப்பெண்களை அனுப்பி வைக்குமாறு கனிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**பட்டமேற்படிப்பு ஆய்வுக்கட்டுரை, – வாய்மொழித்தேர்வுகள் (நான்காம் பருவம்)**
**(M.A..,M.Sc.,M.Com.., MSW & PGDCA)**

| | |
|---|---|
| திருச்சி, கரூர், அரியலூர், பெரம்பலூர் மாவட்டங்களைச் சார்ந்த இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகள் | 17.03.2017 |
| புதுக்கோட்டை,தஞ்சாவூர், திருவாரூர் நாகை மாவட்டங்களைச் சார்ந்த இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகள் | 22.03.2017 |

**MSW களப்பணி தேர்வுகள் (இரண்டாம் மற்றும் நான்காம் பருவம்)**

| | |
|---|---|
| திருச்சி, கரூர், அரியலூர் பெரம்பலூர் மாவட்டங்களைச் சார்ந்த இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகள் | 24.03.2017 |
| புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருவாரூர், நாகை மாவட்டங்களைச் சார்ந்த இணைவு பெற்ற அனைத்துக் கல்லூரிகள் | 28.03.2017 |

இக்கடிதம் கிடைக்கப் பெற்றமைக்கு ஒப்புதல் அளிக்குமாறும் கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள
R. [signature] 01/02/17
தேர்வு நெறியாளர்(பொ)